DIRECTOR OF MUNICIPAL ADMINISTRATION
- 9 AUG 2010
CHEPAUK, CHENNAI

<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – குடிநீர் வழங்கல் – சேலம் மாநகராட்சியின் இணைந்த பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் 2–ம் கட்ட திட்ட பணிகளுக்கான திருத்திய மதிப்பீட்டுத்தொகை ரூ.3150 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பதல் வழங்கியும் மற்றும் மேற்படி திட்டச்செலவினை சேலம் மாநகராட்சியே ஏற்கவும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 153 — நாள் 09.08. 2010
ஆடி 24 திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது

(1) அரசாணை(நிலை)எண்.134, ஊரக வளர்ச்சி(குவ1)துறை நாள் 2.7.98.

மீண்டும் படிக்கப்பட்டது.

(2) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண். 30406 /உ_பொ 7 / தி.மே.பி /2008, நாள் 29.8.2008.

WS / PCE / ITS

---

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சேலம் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் குடிநீர் கட்டமைப்புகளை அமைக்க சேலம் மாநகராட்சியுடன் இணைந்த பகுதிகளுக்கான 2ஆம் கட்ட குடிநீர் திட்டம் ரூ.2484 இலட்சங்களில் செயலாக்க நிர்வாக ஆணை பிறப்பித்து, (Water Supply Scheme to Added areas of Corporation of Salem – Phase.II) இத்திட்டத்தினை செயல்படுத்திட தேவையான நிதியை சேலம் மாநகராட்சி ஹட்கோ (HUDCO) நிதி நிறுவனத்தில் கடன் பெற்று செலுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், நிதி ஆதாரம் முடிவு செய்ததில் ஏற்பட்ட கால தாமதத்தினால் இத்திட்டத்தினை முன்னுரிமை அடிப்படையில் 4 பகுதிகளாக நிறைவேற்றிட முடிவு செய்யப்பட்டு முதற்பகுதி பணிகள் 2003–ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது எனவும், இந்நிலையில் TNUFISL நிறுவனம் ஜனவரி 2003–ல் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.1684 இலட்சங்கள் கடனாகவும் ரூ.300 இலட்சங்கள் மான்யமாகவும் சேலம் மாநகராட்சிக்கு வழங்கிட ஒப்புக்கொண்டது எனவும் இதனைத் தொடர்ந்து திட்டத்தில் 2, 3 மற்றும் 4ஆம் பகுதி பணிகள் நிறைவேற்றிட அப்போதைய

(2001 ம் ஆண்டு) மக்கள் தொகையினை கணக்கில் கொண்டு சேலம் மாநகராட்சியின் தேவைக்கு ஏற்ப மாநகராட்சியின் இசைவுடன் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன என்றும், இத்திட்டத்திற்கு நூற்று வீத கட்டணம் 18½% ல் இருந்து 13% ஆக குறைக்கப்பட வேண்டுமென சேலம் மாநகராட்சி கேட்டுக் கொண்டதாலும், திட்டத்தில் வால்வு அமைக்கும் கட்டுமானங்களை (Valve Pits) காங்கிரீட்டினால் அமைக்க கோரிக்கை வைத்ததாலும் விரிவான தொழில் நுட்ப மதிப்பீடுகள் 5/2004–ல் திருத்தியமைக்கப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் பெற்று 2 மற்றும் 4ஆம் பகுதி பணிகள் 4/2005 மற்றும் 7/2005–ல் துவங்கப்பட்டு, 5/2008–ல் முடிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் ஒப்பந்தப் புள்ளிகள் நான்கு முறை கோரப்பட்டும் பலனில்லாததால் இத்திட்டப்பணிகளை மேலும் 3 உப பிரிவுகளாக பிரித்து ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டதில், 7வது முறை ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று திட்டப்பணிகள் 24.4.2007–ல் துவங்கப்பட்டு 12/2008–க்குள் நிறைவேற்றிட துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்திட்டம் ஒப்பளிப்பு பெறப்பட்ட கருத்துருவில் சில மாற்றங்களுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது எனவும் மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்திட செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் தேவைப்படும் நிதி மீதான திருத்திய மதிப்பீடு ரூ.3150.00 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது என்றும், இத்திட்ட கருத்துருவின் திருத்திய மதிப்பீடு ரூ.3150.00 இலட்சம், ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகையான ரூ.2484 இலட்சத்தைவிட 26.85 சதவீதம் அதிகம் எனவும் இத்திட்டத்தை நிறைவேற்றிட நிதி ஆதாரம் முடிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தாலும், தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் கிடைக்கப்பெறாததாலும், பணிக்கட்டணங்கள் ஏற்றத்தினாலும், தளவாடங்கள் விலை ஏற்றத்தினாலும் மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப கூடுதல் கட்டுமான பணிகள் அமைக்க வேண்டிய நிர்பந்தத்தினாலும், கூடிவரும் போக்குவரத்திற்கு ஏற்ற இரும்பு குழாய்கள், வால்வு குழாய்கள், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் சேர்க்கப்பட்டதாலும் திட்டம் செயல்படுத்திட ரூ.666.00 இலட்சம் கூடுதலாக தேவைப்பட்டது தவிர்க்க இயலாததானது என்றும் தெரிவித்துள்ளார்.

4) சேலம் மாநகராட்சி தனது 26.6.2008–ஆம் நாளிட்ட தீர்மான எண்.60–ல், திட்ட தொகைக்கு தேவையான நிதியை மாநகராட்சி நிதி TNUFISL நிறுவனத்தின் மூலம் கடன்/அரசு மான்யம் பெற்று செயல்படுத்திட தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும், எனவே வாரியம் தனது 19.8.2008–ம் நாளிட்ட வாரியத்தீர்மான எண்.27–ல் சேலம் மாநகராட்சியின் இணைந்த பகுதிகளுக்கான குடிநீர் திட்டம் 2–ஆம் கட்ட அமைப்புச் செலவு திருத்திய மதிப்பீடு 3150.00 இலட்சம் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.55.50 இலட்சம் எனவும், தனி நபர் செலவு விகிதம் ரூ.1542 எனவும் 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.6.67 எனவும் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டினை, அரசின் திருத்திய நிர்வாக ஒப்புதல் பெறவும் திட்டத்திற்கு தேவையான ரூ.3150 இலட்சத்தை முழுமையாக சேலம் மாநகராட்சியே ஏற்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்துள்ளது என்பதால் மேற்கூறிய வாரிய கருத்துருவின் அடிப்படையில் மேற்கூறிய திட்டத்திற்கு அரசின் ஒப்புதலைக் கோரியும் மற்றும் இத்திட்ட செலவினம் ரூ.3150 இலட்சத்தை (ரூபாய் மூவாயிரத்து நூற்று ஐம்பது இலட்சம்) முழுமையாக சேலம் மாநகராட்சியே ஏற்று, இத்திட்டத்தொகையினை, திட்ட செயலாக்கத்திற்கு செலுத்த வேண்டும் என ஆணையிடவும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்த பின் அதனை ஏற்றுக்கொள்ள அரசு தீர்மானித்து, அதன்படி சேலம் மாநகராட்சியில் இணைந்த பகுதிகளுக்கான குடிநீர் திட்டம் 2–ம் கட்ட அமைப்புச் செலவின் திருத்திய மதிப்பீடு ரூ.3150 இலட்சம் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவாக ரூ.55.50 இலட்சம் எனவும், தனி நபர் செலவு விகிதமாக ரூ.1542 எனவும் 1000 லிட்டருக்கான குடிநீர் செலவாக ரூ.6.67 எனவும் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடான இத்திட்ட செலவினமான ரூ.3150 இலட்சத்தை (ரூபாய் மூவாயிரத்து நூற்று ஐம்பது இலட்சம்) முழுமையாக சேலம் மாநகராட்சியே ஏற்று, இத்திட்டத்தொகையினை, திட்ட செயலாக்கத்திற்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1754/எப்.எஸ்/பி/2010, நாள் 15.7.2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5
மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம், சேலம்.
ஆணையர், சேலம் மாநகராட்சி, சேலம்.
உள்ளாட்சிகளின் நிதித்தணிக்கை இயக்குநர், சென்னை–108.
மாநில கணக்காயர் சென்னை–18.
மாநில கணக்காயர் சென்னை–9 (தணிக்கை)
மாநில கணக்காயர் சென்னை–35
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2/குவ2/குவ3/குவ4/)துறை, சென்னை–9
இகோ / உ.நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

9/8/10
பிரிவு அலுவலர்.